Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பரத நாட்டியத்தில் தாளக்கருவிகள்

2

ஜெ.வடிவேல்
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி,சென்னை – 600028
Email: jvvelmiruthangam@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:-**

பழங்காலத்தில் கூத்து, சதிர் ஆட்டம் என்று அழைக்கப்பட்ட நாட்டியக்கலையானது. பரதமுனிவரால் வகைப்படுத்தப்பட்டு பரத நாட்டியமாக அழைக்கப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் இசை மற்றும் நாட்டியக்கலைகள் திருக்கோயில்களில் மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. அதிலும் நாட்டியமானது பூஜைக்காலத்தில் இறைவனுக்கு முன்னால் மட்டுமே ஆடப்பட்டு வந்தது.

இத்தகைய சிறப்புமிக்க பரதநாட்டியத்திற்கு பக்க இசைக்கருவிகளாக பாட்டு, நட்டுவம் செய்யும் தாளம், மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல், முழவு, இடக்கை போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகை பக்க இசைக் கருவிகளில் தாள இசைக்கருவிகள் பரத நாட்டியத்திற்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறது. இத்தகைய சிறப்புமிக்க தாளஇசைக்கருவிகளை பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

ஆய்வின் நோக்கம்:

தாளத்தின் அடிப்படையிலேயே நாட்டியம் ஆடப்படுகிறது. அந்நாட்டியத்திற்கு மிகவும் உறுதுணையாக இசைக்கப்படும் தாள இசைக்கருவிகளை பற்றியும், நாட்டியத்திற்கு இன்றியமையாத தாளக்கருவிகளைப்பற்றியும் விளக்குவதே இந்த ஆய்வில் நோக்கம்.

திறவுச் சொற்கள்:-

சிலப்பதிகாரம், கூத்தநூல், பஞ்சமரபு, பரதநாட்டிய சாஸ்திரம் , ஆமந்திரிகை, உடுக்கை,108 தாண்டவம்.

**முன்னுரை:**

பழங்காலத்தில் கூத்து, சதிர் ஆட்டம் என்று அழைக்கப்பட்ட நாட்டியக் கலையானது பரதமுனிவரால் வகைப்படுத்தப்பட்டு பரத நாட்டியமாக அழைக்கப்பட்டு வருகிறது. இத்தகைய சிறப்பு மிக்க பரத நாட்டியத்தை மெருகேற்ற பல பக்க இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. அதில் தாளத்திற்கு முக்கிய பங்கு வசிக்கும் தாளஇசைக்கருவிகள் நாட்டியத்திற்கு பக்க இசையாக வாசிக்கப்பட்டு வந்துள்ளன. அத்தகைய சிறப்பு மிக்க தாள இசைக்கருவிகளை பற்றி

இக்கட்டுரையில் காண்போம்.

**<u>பரதநாட்டியம்:</u>**

நாட்டியம் என்பதற்கு “நட்" என்பதே சமஸ்கிருத மூலச்சொல்லாகும். நட் என்றால் சிலர் நடனம் என்றும் இன்னும் சிலர் நாடகம் என்றும் பொருள் கொள்கிறார்கள். இந்த மூலச்சொல் இந்த இரண்டு கலைகளையும் குறிக்கும். ஏனென்றால் பண்டைய பரதத்தில் நாடகம், நடனத்தை ஒரு அங்கமாக கொண்டிருந்தது.

இசை, நடன அசைவு, வசனம் இவை மூன்றும் இணைந்து நிகழ்த்தப்பட்ட கலைதான் நாட்டியம். ஆரம்ப காலத்தில் இசை மற்றும் நடனம் திருக்கோயில்களில் மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. அதிலும் நாட்டியமானது பூசைக்காலத்தில் இறைவனுக்கு முன்னால் மட்டுமே ஆடப்பட்டு வந்தது.

திருக்கோயில்களில் பூசைக்காலத்தில் இறைவனுக்கு முன்னால் மட்டுமே ஆடப்பட்டு வந்த நாட்டியமானது பொழுது போக்கு நிகழ்வாக மாற்றம் பெற்று நாட்டை ஆளும் மன்னர்கள் கண்டு மகிழ அரண்மனை தர்பாரிலும், பொதுமக்கள் கண்டு மகிழ கோயில் மண்டபங்களிலும் நடத்தப்பட்டது. இவ்வாறாக நாட்டியக்கலை பெரிதும் வளர்ச்சி பெற்று ஆடப்பட்டு வருகிறது.

**<u>நாட்டியக் குழு:</u>**

பழங்காலத்தில் பரத நாட்டிய இசைக்குழுவில் நடன ஆசான் தாள ஒலியில் மூலம் நட்டுவமும், குரலிசையும், மத்தள இசையும், யாழிசையும், குழலிசையும் அந்தந்த இசைக்கலைஞர்கள் இசைத்துள்ளனர். இத்தகைய இணைத்து இசைக்கப்படும் ஓர் இசைமுறை "ஆடல் இசைமுறை" என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய ஆடல் இசைமுறை பழந்தமிழரால் கையாளப்பட்டது என்று கீழ்காணும் சிலப்பதிகார பாடல் குறிப்பின் மூலம் அறியப்படுகிறது.

[1]"யாழும் குழலும் சீரும் மிடலும்
தாழ் குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்
இயைந்த பாடல் இசையுடன் படுத்து"

இப்பாடல் மூலம் நடன இசைக்குழுக்களில் இடம்பெற்ற இசைக்கலைஞர்கள் இசைக்கருவிகள் மூலம் நாட்டிய நிகழ்வு நடத்தியுள்ளனர் என அறியமுடிகிறது.

[2]நாட்டிய நிகழ்வுக்கு பயன்படுகின்ற இசைக்கருவிகளை நன்கு சுருதியினை கூட்டிக்

கொண்டு நாதச் செறிவுடன் குரலிசையாளர், குழலிசையாளர், யாழிசையாளர், தாளவாத்தியக் கலைஞர்கள் அனைவரும் இணைந்து பாடல் இசைப்பது பூர்வரங்கம் எனப்படும்.

பூர்வரங்கம் திரைக்கு பின்னால் செய்யப்படுபவை. இதனை ஒன்பது பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதன்முலம் நாட்டியத்திற்கு பின்னாலும், வலது பக்கத்திலும் மட்டுமே நாட்டிய குழு இசைத்து அறிய முடிகிறது.

[3]"மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்து ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்து இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்து ஆட்டத்து இயல்பே"

சிவபெருமானின் தாண்டவத்தின் போது உடுக்கை ஒலித்தது. அந்த ஒலியிலிருந்து இசை உருவாகியது. இசையிலிருந்து ஆட்டம் தொடங்கியது. கூத்தின் தொடக்கத்திற்கு இசை மூலமாகிறது என்பது இப்பாடல் உணர்த்தும் செய்தியாகும்.

## <u>சிலப்பதிகாரத்தில் நாட்டிய இசைக்குழு:</u>

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்ற கதைத்தால் நாட்டியத்தை பற்றியும் நாட்டியத்திற்கு பயன்படுத்தப்பட்ட இசைக்கலைகளை பற்றியும் இசைக்கலைஞர்களை பற்றியும் மிகச் சிறப்பாக கூறியுள்ளார்.

[4]பாடிய வாரத் திற்றினின்றிசைக்கும்
கூடிய குயிலுவக் கருவி களெல்லாம்
குழல் வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடி நின் றிசைத்த தாமந்திரிகை
ஆமந்திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டி ரண் ருடையதோர் மண்புலமாகக்

(சிலப்பதிகாரம்;3; 137 - 144)

நாட்டியம் ஆடுவதற்கு முன் இறை வணக்கப் பாடலுடன் தொடங்கப்படுகிறது. பாட்டு பாட ஆரம்பித்தவுடன் பாட்டிற்கு தக்கவாறு குழலிசை எழுப்பப்படுகிறது. அதனை ஒன்றிணைந்து யாழ் இசைக்கப்படுகிறது. யாழினை தொடர்ந்து தண்ணுமை இசைக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து முழவு தண்ணுமை வழி அதிர்கிறது. அதன்பின் இடக்கை ஒலி கூட்டுவதாக உரையாசிரியர் விளக்குகிறார். இதன் மூலம் பண்டைய காலத்தில் வாய்ப்பாட்டு, இதன்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இசைக்கருவியாக குழலும், யாழும் பயன் படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அதேபோல் தாள இசைக்கருவிகளில் தண்ணுமை, முழவு, இடக்கை ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**நாட்டியத்தில் தாளம்:**

> [5]சிவபெருமான் ஆடிய 108 தாண்டவ நாட்டிய முறைகளை அடிப்படையாகக் கொண்டு 108 தாளங்கள் பிறந்தன என்றும் இதனை அகத்தியர் தொகுத்து எழுதினர் என்றும் கூத்தநூல் கூறியுள்ளது. இந்த 108 நாட்டியங்களில் இன்றியமையாதது 12 நாட்டியங்களாகும். இதில் ஒன்றாக பேரணி நாட்டியத்தை சாத்தனார் குறிப்பிடுகின்றார்.

பேரணி நாட்டியம் என்பது சித்திர நாட்டியம் ஆகும். மணல் பரப்பில் நடனமாடி காலால் மணலில் சித்திரம் வரைவதே பேரணி நாட்டியமாகும்.இதில் முக்கிய பங்கு வசிப்பது தாளமே ஆகும்.

**நாட்டியத்திற்கு இசைக்கப்பட்ட தாளக்கருவிகள்:**

சிலப்பதிகாரம், கூத்தநூல், பஞ்சமரபு, பரதநாட்டிய சாஸ்திரம் போன்ற நூல்களின் வாயிலாக பரதநாட்டியத்திற்கு முக்கிய தாளக்கருவியது. நட்டுவாங்க தாளமும், தண்ணுமை(மிருதங்கம்), முழவு, மத்தளம், இடக்கை, போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இதில் நடன மணிகளை ஆடச்செய்தார். அதனை ஒத்து மிருதங்க கலைஞர் மிருதங்கம் இசைகிறார்.அதன்வழி நின்று முழவும் மத்தளம், இடக்கையும் ஒலிப்பதாக சங்க இலக்கிய நூல் மூலம் அறியப்படுகிறது.

**நட்டுவாங்க தாளம்(குழித்தாளம்):**

நடன ஆசான் தாளத்தை லய நிர்ணயம் செய்து தாளத்தின் போக்கில் அடைவுகளை தட்டியும், ஜதி கோர்வைகளை சொல்லும் போது அதற்கான அடைவுகளை தாளத்தில் தட்டுபோது நாட்டியம் ஆடுபவர் தட்டும் ஒலியை கேட்டு எளிதாக அடைவுகளை ஆட முடிகிறது. நடன ஆசான் ஒட்டு மொத்த நாட்டியதையும் தன் தாளத்தை கொண்டு கட்டுக்குள் வைத்து வழி நடத்துகிறார்.

**மிருதங்கம் :**

நாட்டியத்திற்கு மிக முக்கிய பங்கு வசிக்கும் தாளக்கருவி மிருதங்கமாகும். நாட்டியமானது இசை, தாளம், பாவம் கலந்தது. இந்த மூன்றை ஒன்று சேர அரவணைத்துக் கொண்டு செல்ல பயன்படுவது மிருதங்கம் ஆகும். பாட்டிற்கு ஏற்றவாறு வாசித்து நட்டுவனாரின் தாள அடவுகளை புரிந்து அடவுகளாக வாசித்தும் நடன மணிகளின் பாவத்திற்கு ஏற்றவாறு வல்லினம் மெல்லினம் புரிந்து வாசிக்க வேண்டும்.

தண்ணுமை இசைப்பவர் யாழ்ப்பாடல், குழற்பாடல், கண்டப்பாடல், இவற்றின் இயல்புகளுக்கு ஏற்றவாறு லயம் சேர்த்து முழுக்க வல்லவனாய், பிற முழவுக் கருவிகளின் மிகுந்த ஓசைகளை அடக்குவித்தும்.

தானும் குறைபாடுகளை நீக்கியும் அவற்றை அன்புடன் நிறைவு செய்யும் நுண்ணறிவுடன் இயற்சொல் முதல் நான்கு வகை சொற்களையும் உணர்ந்து தலைமை தாங்கியும் இயக்குபவன் தண்ணுமை முதல்வன் எனப்படுவான் என்று இளங்கோவடிகள் கூறியவரிக்கு இரு உரையாசிரியர்களும் விரிவாக விளக்கம் கூறியுள்ளார்கள்.

1. ஆடலுக்கு முழக்குதல்
2. பாடலுக்கு முழக்குதல்
3. ஆடல் பாடலுக்கு முழக்குதல்

"கீதாங்கம் நிருத்தாங்கமு உபாங்க மென்பன"

(சிலப்பு.3:14 அடியர்)

பாடலுக்கு முழக்குதல் கீதஅங்கம் ஆடலுக்கு முழக்குதல் நிருத்தாங்கம் ஆடல்பாடலுக்கு முழக்குதல் உபாங்கம் என அறியமுடிகிறது.

<u>**முழவு, மத்தளம், இடக்கை:**</u>

பண்டைய காலத்தில் முழவு, மத்தளம், இடக்கை போன்ற தாளக்கருவிகள் நாட்டியத்தில் பங்கு வகுத்துள்ளது. இதனை சங்க கால நூல்கள் மூலம் நாம் அறிய முடிகிறது. இருப்பினும் இவையாவும் நாட்டியத்திற்கு முக்கிய தாளக்கருவியாக இல்லாமல் முக்கிய தாளக்கருவிக்கு துணை கருவியாக இருந்துள்ளது. நாளடைவில் இது குறைக்கப்பட்டு நாட்டியத்திற்கு மிருதங்கம் மட்டுமே இசைக்கப்பட்டுவருகிறது.

**தட்டு முட்டு**:

தட்டு முட்டு என்ற சொல் பழங்கால முதலே நடைமுறையில் வந்துள்ளது. தட்டு என்றால் தாளம் தட்டுவதையும் முட்டு என்றால் மிருதங்கம் இசைப்பதையும் குறிக்கும். கோயில் வழிபாட்டு முறையில் தட்டு முட்டு இன்றும் காணப்படுகிறது. பரத நாட்டியத்தில் நடன மணிகள் ஆடும்போது அவரை ஆடலாசிரியர் நட்டு வாங்கம் செய்வார். அவருக்கு உறுதுணையாக இருப்பது மிருதங்க கலைஞர் ஆவார். பண்டையகாலத்தில் ஆடல் அரங்கில் பாட்டு தொடங்குவதற்கு முன்னரே வாத்திய இசையுடன் நடனமாடுபவர் நடனமாடிக் கொண்டு அரங்கத்தினுள் நுழைவது வழக்கமாக இருந்திருக்கிறது. இது இன்னும் நடைமுறையில் இருக்கிறது. நடனத்திற்கு முக்கியமாக கருதப்படுவது தாளம் ஆகும். அதனால் தான் நட்டு வாங்கம் மூலம் அடவுகளை தட்டும்போது

மிருதங்கத்தினால் அதே அடைவுகளை மிருதங்க சொற்களை கொண்டு வாசிக்கும்போது நடனமணி அதே அடைவுகளை ஆடும் போது அது பார்வையாளர்களை உற்சாகப்படுத்துகிறது. அதனால் தான் நாட்டியத்திற்கு தட்டும் முட்டும் என்று சொல் பழகி வருகிறது.

அன்றைய காலத்தில் கோயில்களில் கணிகையர் நடனம் ஆடும் வழிபாடு பழக்கத்தில் இருந்தது. அதற்கு தட்டுமுட்டு வாசிக்கப்பட்டது. இக்காலத்தில் நடன வழிபாடு இல்லாத நிலையில் தட்டுமுட்டு மட்டுமே இசைக்கப்படுகிறது.

**முடிவுரை:**

அக்காலம் முதல் பரத நாட்டியத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக தாளக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆடல், பாடல், அரிக்கடை, பஜனை போன்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் மிருதங்கம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கோயில்களில் கணிகையர் வழிபாட்டு நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த காலகட்டத்தில் நடனத்திற்கு உறுதுணையாக மிருதங்கம், நட்டுவதாளம் முக்கியமாக இருந்தது மேலும் எதற்கு பக்கமாகத்தான் முழவு, இடக்கை போன்ற தாளக்கருவிகள் பயன்படுத்தப்பட்டது நன்கு அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. தமிழிசை ஆய்வுமாலை, முனைவர், சுரேஷ் ப. 92
2. பரதநாட்டிய சாஸ்திரம், ஸ்ரீ ராமா தேசிகன் ப. 59
3. கூத்தநூல் கவிஞர் எஸ். டி. எஸ். யோகியார் ப. 15
4. தமிழர் இசை முனைவர் ஏ. என். பெருமாள் ப. 210
5. மிருதங்க சங்கீத சாஸ்திரம் பிரம்ம ஸ்ரீ அ.நா.ேசாமசுந்தரம் பக்.26

**துணை நூற்பட்டியல்:**

1. தென்னக இசைஇயல் பி.டி. செல்லத்துரை - சே. ரா. வைகறைப் பதிப்பகம் ஆகஸ்ட் 2010
2. சிலம்பில் அரங்கேற்று கதையின் இசைப்பதிகள் – முனைவர். கோ. சண்முகவேல் - மலர் பதிப்பகம் - 2000
3. தமிழர் நடனவரலாறு - முனைவர். சே.இராகுராமன் - நந்தினி பதிப்பகம் 2006
4. பரதக்கலை(கோட்பாடு) - டாக்டர். பத்ம சுப்பிரமணியம் - வானதி பதிப்பகம் அக்டோபர் 2016
5. தமிழர் இசை - முனைவர். ஏ. என். பெருமாள் - உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் -

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அக்டோபர் 1984

6.தமிழிசை ஆய்வு மலை - முனைவர். சுரேஷ் – 2009

7. பரத நாட்டிய சாஸ்திரம் - ஸ்ரீ ராம தேசிகன் - 2001

8. கூத்தநூல்- எஸ். டி. யோகியர்

9. மிருதங்க சங்கீத சாஸ்திரம் - பிரம்ம ஸ்ரீ அ.நா.ே◌சாமசுந்தரம்